### முக்கிய தகவல்

மருந்து உட்கொண்டு வரும்போது, தோலில் காயங்கள் தோன்றினால், மற்றும்/அல்லது கிருமித் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டால், குறிப்பாக, தொண்டைப் புண் அல்லது வாய்ப் புண் அல்லது காய்ச்சல் இருந்தால், மருந்து உட்கொள்வதை நிறுத்திவிட்டு, உடனே மருத்துவரைப் பாருங்கள். மருந்தை மீண்டும் தொடங்குவதற்கு முன்பாக, எலும்புமஜ்ஜை அடக்கல் (marrow suppression) இருக்கிறதா என்பதைக் கண்டறிய இரத்தப் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.


## மருந்தை நான் எப்படி வைத்திருக்க வேண்டும்?

மருந்தை, அது முதலில் இருந்த டப்பாவிலேயே போட்டு, குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம், நேரடி சூரியஒளி படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# தைராய்டு-எதிர்ப்பு மருந்துகள்

## Anti-thyroid Medicine

T24R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

உங்கள் மருத்துவர் தைராய்டு-எதிர்ப்பு மாத்திரைகளை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். கார்பிமசோல் (Carbimazole) மற்றும் புரோபில்தியோயூரசில் (Propylthiouracil) எனப்படுபவை சாதாரணமாக பயன்படுத்தப்படும் மாத்திரைகள். தைராய்டு எனப்படும் கேடயச் சுரப்பி அளவுக்கு அதிகமாக வேலை செய்தால் (இது ஹைப்பர்தைராய்டிசம் என்றழைக்கப்படுகிறது), தைராய்டு ஹார்மோன் அதிக அளவில் சுரக்கும். இதனைக் குறைக்கவே தைராய்டு-எதிர்ப்பு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

கார்பிமசோல் மற்றும் புரோபில்தியோயூரசில் மாத்திரைகளை வாய்வழி உட்கொள்ள வேண்டும். இவற்றின் அளவை உங்கள் தேவைக்கேற்ப மருத்துவர் தீர்மானிப்பார். ஆரம்பத்தில் எடுக்கப்படும் மருந்தளவு சிகிச்சையின்போது அவ்வப்போது மாற்றப்படலாம்.

கார்பிமசோல் மாத்திரை ஆரம்பத்தில் பொதுவாக, நாளொன்றுக்கு 20 மிகி முதல் 60 மிகி வரை தரப்படுகிறது. இதை ஒரே தடவையிலோ அல்லது பல தடவைகளாகப் பிரித்தோ உட்கொள்ளலாம். தைராய்டு சுரப்பி கட்டுக்குள் வந்ததும், மருந்தின் அளவு நாளொன்றுக்கு 5 மிகி முதல் 15 மிகிராமாக குறைக்கப்படலாம்.

புரோபில்தியோயூரசில் மாத்திரை ஆரம்பத்தில் பொதுவாக நாளொன்றுக்கு 300 மிகி முதல் 600 மிகி வரை தரப்படுகிறது. இதை ஒரே தடவையிலோ அல்லது பல தடவைகளாகப் பிரித்தோ உட்கொள்ளலாம். தைராய்டு சுரப்பி கட்டுக்குள் வந்ததும், மருந்தின் அளவு நாளொன்றுக்கு 50 மிகி முதல் 150 மிகிராமாக குறைக்கப்படலாம்.

மருந்து எடுக்கத் தொடங்கியதும், ஒன்று முதல் மூன்று வாரங்களில் சிறிது பலன் தெரிய ஆரம்பிக்கும். முழுப் பலனை அடைய நான்கு முதல் எட்டு வாரங்கள் பிடிக்கும். அதற்குப் பிறகும் தைராய்டு சுரப்பி கட்டுக்குள் இருப்பதை உறுதி செய்ய, மருந்தை நீங்கள் தொடர்ந்து பல மாதங்களுக்கு உட்கொண்டுவர வேண்டும். மருந்தை எப்போது நிறுத்த வேண்டும் என்பதை மருத்துவர் முடிவு செய்வார். மேலும், சிகிச்சை பலனளிக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள மருத்துவர் உங்களை எப்போதாவது இரத்தப் பரிசோதனைக்கு அனுப்பலாம்.

ரேடியோ-ஐயோடின் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை ஆகிய இரண்டும் ஹைப்பர்தைராய்டிசத்திற்கான மற்ற சிகிச்சைகள். ரேடியோ-ஐயோடின் சிகிச்சை தேவைப்படும்போது, மருத்துவர் நீங்கள் உட்கொண்டு வரும் மாத்திரைகளை தற்காலிகமாக நிறுத்தச் சொல்வார்.



நோயாளி தகவல் கையேடு । **தைராய்டு-எதிர்ப்பு மருந்துகள்**

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

சிகிச்சைஆரம்பித்த முதல் எட்டு வாரங்களில் பொதுவாக சில பக்க-விளைவுகள் இருக்கலாம். அவற்றில் சாதாரணமாக காணப்படுபவை குமட்டல், தலைவலி, தோல் தடிப்புகள், அரிப்பு, வயிற்றுக் கோளாறு மற்றும் மூட்டு வலி. சிலருக்கு, தலைமுடி உதிர்தல், தசை மற்றும் கல்லீரல் கோளாறுகளும் அரிதாக ஏற்படலாம்.

தசைவலி இருந்தாலோ, அல்லது தோல் மற்றும் கண் வெண்படலம் மஞ்சள் நிறமாக மாறினாலோ, அல்லது பக்க-விளைவுகள் குறித்து கவலையாக இருந்தாலோ, உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

நீங்கள் கர்ப்பமாக இருந்தால் மருத்துவரிடம் தெரியப்படுத்துங்கள். இம்மருந்துகளை கர்ப்பக் காலத்தில் உட்கொள்ளலாம் என்றாலும், இரத்தத்தின்வழி குழந்தைக்கு இது சென்றுவிடும் என்பதால், கவனமாக இருக்க வேண்டும். குழந்தைக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக ஆகக் குறைந்த அளவு மருந்தே கொடுக்கப்படும். குழந்தை பிறப்பதற்கு 3 முதல் 4 வாரங்கள் இருக்கும்போது மருந்து நிறுத்தப்படும். இது தவிர, இந்த மருந்து எடுக்கும்போது தாய்ப்பால் கொடுக்கக் கூடாது.

மருந்து எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னால், உங்களுக்கு கல்லீரல் பிரச்னை ஏதாவது இருந்ததா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.